# வேத வசனம் என்ன கூறுகிறது?

## 1. நீ பாவம் செய்திருக்கிறாய்

(1) "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது"—எரேமியா 17:9.

(2) "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி."
—ரோமர் 3:23.

(3) "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது."
—I யோவான் 1:8.

## 2. நீ இழந்து போனவன்

(1) "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்."
—எசேக்கியேல் 18:20.

(2) "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை"
—ரோமர் 3:10.

(3) "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று."
—யோவான் 3:18.

## 3. தேவன் உன்னை நேசிக்கிறார்

(1) "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."
—யோவான் 3:16.

(2) நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."
—ரோமர் 5:8.

(3) "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்."
—ரோமர் 8·36.

## 4. அவர் உன்னை இரட்சிப்பார்

(1) "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."
—I யோவான் 1:9.

(2) "விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."
—வெளி. 22:17.

(3) "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."
—யோவான் 6:47.

## 5. அவர் இப்பொழுதே உன்னை இரட்சிப்பார்

(1) "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்." —எபிரெயர் 3:15.

(2) "இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்." —II கொரிந்தியர் 6:2.

(3) "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." —யோவான் 6:37.

## 6. அவர் உன்னை வைத்துக்கொள்ள வாக்குப்பண்ணுகிறார்

(1) "அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே." —ரோமர் 14:4.

(2) "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது." —I பேதுரு 1:5.

(3) "நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை." —யோவான் 10:28.

## 7. நீ இரட்சிக்கப்பட்டாய் என்பதற்கு நிருபம்

(1) "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்". —யோவான் 3:63.

(2) "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்." —I யோவான் 3:14.

(3) "இப்படியிருக்க; ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின." —II கொரிந்தியர் 5:17.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

இக்கைப்பிரதியை வாசிக்கும் அன்பார்ந்த சகோதரனே சகோதரியே இன்னும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பற்றி அறிய விரும்பினால் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

BY JOHN DENMARK, TRACT EVANGELISTIC.

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India